2018 ஜூன் 14]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கல்வியறிவு அதிகமான மாவட்டமாக இருந்தாலும், அங்குள்ள முக்கியமான பகுதிகளில் நூலகங்கள் இல்லாத நிலை இருக்கிறது. குறிப்பாக, சைமன் காலனி ஊராட்சியிலிருக்கக்கூடிய வாணியக்குடி பகுதியில் ஒரு புதிய நூலகம் அமைக்கவும், வாள்வச்சகோஷ்டம் பேரூராட்சியில் உள்ள பள்ளியாடி பகுதியில் ஒரு புதிய நூலகம் அமைக்கவும், அந்த நூலகத்தை* digital *வடிவில் அமைக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பகுதிநேர நூலகங்கள் அமைப்பதற்கு 200 உறுப்பினர்கள் தேவைப்படுவதோடு, அதற்கு ரூ.30/– வீதம் நிதியும் செலுத்தப்பட வேண்டும். மேலும், பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான வாடகைக் கட்டடங்களையும் உறுப்பினர் பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு இடங்களை உறுப்பினர் பெற்றுத் தரும்பட்சத்தில், உடனடியாக அங்கே நூலகங்கள் அமைக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

தரம் உயர்த்துதல்

***22306—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், கருங்கல்லிலுள்ள துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[*2018 ஜுன் 14*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றாரா அல்லது transformer–*ஐ தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றாரா என்பது தெரியவில்லை. துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், அதைத் தரமுயர்த்தும் அளவிற்கு, அங்கு மின் பளு எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. வேண்டுமென்றால், ஏற்கெனவே இருக்கின்ற* 1x10 MVA transformer–*உடன், இன்னொரு* 10 MVA *திறன் கொண்ட மின்மாற்றி அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்கல் ஊரில் 110/11* KV *துணை மின் நிலையம் உள்ளது. இந்த மின் நிலையம் அமைக்கும்போது மக்களின் நலன் கருதி 2* power transformers, *மின்மாற்றிகள் வைப்பதற்குத் தகுந்தாற்போன்று பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒரு* transformer–*மின்மாற்றி, 10* MVA *தரத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்று வரை தரம் உயர்த்தப்படாமல், கூடுதல்* transformer–*மின்மாற்றி வைக்கப்படாமல் உள்ளது. இதுசம்பந்தமாக அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கை வைத்தும் தரமுயர்த்தப்படவில்லை. ஏன் தரமுயர்த்தப்படவில்லை என்று மின்சார வாரிய அதிகாரிகளிடம் கேட்டால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எஸ்.ஆர். புதூர் 230/110* KV *துணை மின்நிலையத்திலிருந்துதான் மின்சாரம் கொண்டு செல்லப்படுவதால், தக்கலை பகுதியில் அமைந்துள்ள 110/11 கே.வி. துணை மின் நிலையத்தை 230/110 கே.வி. துணை நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கூறுகிறார்கள். கருங்கல் பகுதி மற்றும் பழமை வாய்ந்த முஞ்சிறை பகுதியில் இரண்டு* power transformers–*மின்மாற்றிகள் உள்ளன. அதேபோன்று நடைக்காவு*

பகுதியில் ஒன்றும் இருக்கிறது. கருங்கல் பகுதியில் ஏற்கெனவே பல கல்லூரிகள், பள்ளிகள், குறு, சிறு தொழிற்கூடங்களெல்லாம் அமைந்து வருகின்றன. அதேபோன்று, ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ், தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் வேறு மாவட்டங்களில் குடியிருக்கும் சொந்தக்காரர்களெல்லாம் கருங்கல் பகுதிக்கு வருவதால், அடிக்கடி மின் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவேதான், கருங்கல் பகுதியில் ஏற்கெனவே இருக்கக்கூடிய ஒரு power transformer–உடன் இன்னொரு power transformer அமைத்துத் தருமாறு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல 110 கே.வி. துணை மின் நிலையத்தில் 10 MVA திறன்கொண்ட transformer உள்ளது. இன்னொன்று வைப்பதற்காக ஏற்கெனவே plan செய்து வைத்திருக்கிறோம். இப்போது 9 MVA அளவிற்கு மட்டும்தான் மின் பளு இருக்கிறது. இருந்தாலும், எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இன்னொரு 10 MVA திறன்கொண்ட transformer உடனடியாக அமைக்கப்படும். இதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், “230/110 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்” என்று கேட்டிருக்கிறார்கள். கருங்கல் பகுதியிலிருந்து 17 கி.மீ. தொலைவிலுள்ள தக்கலையில் தற்போது அமைக்கவிருக்கின்றோம். அது அமைக்கப்படுகின்றபோது, எதிர்காலத்தில் மின் பளு பிரச்சினை இல்லாமல் இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டத்தில் மிகப் பெரிய கோட்டமாக குழித்துறை கோட்டம் உள்ளது. Executive Engineer (Distribution) குழித்துறையின்கீழ் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் உள்ளன. அலுவலகம் குழித்துறையிலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் மருதங்கோடு பகுதியில் உள்ளது. இதனால், கருங்கல் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்கள், செயற்பொறியாளர், உதவிக் கணக்கு அலுவலர் ஆகியோரைப் பார்க்க வேண்டுமென்றால், குழித்துறை கோட்ட அலுவலகம் அமைந்துள்ள மருதங்கோடுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, குழித்துறை கோட்டத்தை இரண்டாகப் பிரித்து கருங்கல் பகுதியில் புதிய கோட்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "குழித்துறை கோட்ட அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து புதிய கோட்டம் அமைக்க வேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். எங்கெல்லாம் தேவைகள் அதிகமாக இருக்கின்றனவோ, மின் இணைப்புகள் அதிகமாக இருக்கின்றனவோ, தூரத்தின் அடிப்படையில் கணக்கிட்டு தேவையான இடத்தில் கோட்டங்களை அமைக்கின்றோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, விதி 110–ன்கீழ், "திருவண்ணாமலையில் ஒரு கோட்டம் அமைக்கப்படும்" என்று அறிவித்திருக்கிறார்கள். எதிர்காலத்தில், தேவையினைக் கருத்திற்கொண்டு, தூரத்தையும் கணக்கிட்டு, மின் உபயோகிக்கும் பயனீட்டாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் கணக்கெடுத்து, தேவையிருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் பகுதிகளில் மிகுந்த மின்னழுத்தக் குறைபாடு இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று நீண்ட நெடுநாட்களாக அங்கிருக்கின்ற நகர் நலச் சங்கங்கள் எல்லாம் அரசிடம் வலியுறுத்தி வருகின்றன. அந்த இடத்தில் போதிய இட வசதி இல்லை என்றும், அரசு அதைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருந்தாலும், நங்கநல்லூர் பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்கு மின்சாரத்தை வழங்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், அந்தப் பகுதியில் நீண்ட நெடுநாட்களாக மின்னழுத்தம் இருந்துகொண்டிருப்பதால், மிக விரைவில் அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்து, இருளில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், சென்னையை ஒட்டினாற்போல் அமைந்துள்ள மடிப்பாக்கம், உள்ளகரம் போன்ற பகுதிகளில் எல்லாம் இன்னும் மின் கம்பிகள் மேலே சென்று கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் புதைவடங்களாக மாற்றித் தர வேண்டும். மேலும், மடிப்பாக்கத்தில் அமைந்துள்ள கார்த்திகைபுரம் பகுதியில் அமைந்துள்ள நீண்ட நெடிய ஏரியான ஐயப்பன் நகர் ஏரிக்கரையில், அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் காலையில் நடை பயிற்சி மேற்கொள்கின்றனர். மாலையில் பொழுதுபோக்கிற்காக அமர்ந்திருக்கின்றனர். அந்தப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, 40 இலட்சம் ரூபாய் செலவில், நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே மேலே செல்கின்ற மின் கம்பிகள் மற்றும் மின் கம்பங்களெல்லாம் அந்த நடைபாதையில் செல்வதற்கு இடையூறாக இருக்கின்றன.

முற்பகல் 10–25

அந்த நகரைச் சேர்ந்த நலச் சங்கத்தினர்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கெல்லாம் கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக அந்தப் பகுதியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், . .*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *முன்னுரிமை அடிப்படையில் அந்த மின் கம்பிகளை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தால், பிறகு எதற்கு நான் உங்களை அழைக்க வேண்டும்? நான் எதற்கு சொல்ல வேண்டும்? நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால், நீங்கள் சுருக்கமாக ஒரு கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும். உங்களுக்கு மைக் கிடைத்தது என்பதற்காக நீங்களே பேசிக்கொண்டிருந்தால், மற்றவர்கள் கேட்பதற்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லையல்லவா!*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *முன்னுரிமை அடிப்படையில் அந்த கார்த்திகைபுரம் ரோட்டில் இருக்கின்ற அந்த மின் கம்பிகளை, புதைவடமாக உடனடியாக மாற்றித் தந்தால் நடைபாதை அமைக்கும் பணி மீண்டும் தொடருவதற்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த சோழிங்கநல்லூர் பகுதி குறித்தான கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினரே பதில் சொல்லிவிட்டார்கள். தேவையான துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் பற்றாக்குறையாக இருக்கின்றது. இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்ற காரணத்தினால் பல்லாவரம் பகுதியில் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள், 110 விதியிலே 230/110 கே.வி. துணை மின் நிலையம் புதிதாக அமைப்பதாகச்*

2018 ஜூன் 14]

சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் துணை மின் நிலையத்தை அமைக்கின்றபோது சோழிங்கநல்லூர் பகுதிக்கு மின்பளு அதிகமாக இருந்தாலும்கூட, அதிலிருந்து நாம் கொடுக்கின்றபோது சீரான மின்சாரம் வரும். மின்வெட்டு என்பது இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருளில் இருப்பதை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். அதை மாற்றிக்கொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இருள் என்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் வெளிச்சமாகத்தான் இருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஏரிக்கரையிலே நடைபாதை அமைக்கின்ற காரணத்தினால் அங்கே செல்கின்ற கம்பிகளையும், மின் கம்பங்களையும், மாற்றித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். நீங்கள் சொல்கின்ற அந்தக் கம்பங்கள் H.T. கம்பமா, L.T. கம்பமா என்று தெரியவில்லை. அப்படி H.T. கம்பமாக இருந்தால் நீங்கள் பாதை அமைக்கின்றபோதே, அந்தப் பாதையை மாற்றியமைத்திருக்க வேண்டும். H.T. கம்பத்தை மாற்றித் தருவதென்பது மிகவும் சிரமம். அதுவும் சென்னையிலே H.T. கம்பத்தை மாற்றியமைக்க முற்படும்போது இப்போது எல்லோரும் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகின்றார்கள். தடையாணை வாங்கிவிட்டால், ஓராண்டுக் காலம், 6 மாத காலம் ஆகிவிடுகின்றது. அதுபோல, பணிகள் தடைபடுகின்றபோதுதான் நாம் எதிர்பார்க்கின்ற காலத்தில் அவற்றை முடிக்க முடியாமல் போய் விடுகின்றது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது L.T. கம்பமாக இருந்தால், அந்த ஊராட்சியோ அல்லது நகராட்சியோ அதற்கான பணத்தைக் கட்டினால், அதை மாற்றித் தருவதற்குண்டான நடவடிக்கையை நாங்கள் எடுக்கின்றோம். H.T. கம்பமாக இருந்தால், அதற்கு மாற்று இடம் தேர்வு செய்துதான் நாம் அதை மாற்றியமைக்க முடியும். ஆக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்வது, அந்த நடைபாதையை மக்களுடைய நலனுக்காக அமைக்கின்றார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. H.T. கம்பமாக இருந்தால், நீங்கள் அதை மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–லிருந்து 2011 வரை தாம்பரம் தொகுதியில் பல்வேறுபட்ட பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக, இப்போது இருக்கிற பிரிக்கப்பட்ட தாம்பரம் தொகுதியில், தாம்பரம், செம்பாக்கம், முடிச்சூர், பெருங்களத்தூர் போன்ற பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஒரு புதிய பிரச்சினை என்னவென்று சொன்னால், ஏற்கெனவே 230/110 கே.வி. திறனுள்ள இரண்டு துணை மின் நிலையங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பாக தாம்பரம், கடப்பேரி பகுதிகளில் போடப்பட்டிருக்கின்றன.* (குறுக்கீடு) *அது* repair *ஆக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேற்றுகூட, வராண்டாவில் சொல்கின்ற நேரத்திலும், மிகவும் மோசமாக இருக்கின்ற அந்த நிலைமையை அவருடைய பார்வைக்குக் கொண்டு வந்திருக்கின்றேன். ஆகவே, அந்த 2 துணை மின் நிலையங்களைப் புதுப்பித்துத் தந்தால் நன்றாக இருக்கும். தாம்பரம் பகுதியில் இப்பொழுது மின்தடை ஏற்படுகிறது. சேலையூர் பகுதியிலும், கிழக்கு தாம்பரம் பகுதியிலும், தாம்பரம் பகுதியிலும் மிக மிக* low voltage *ஆக, இரவு நேரத்திலே கஷ்டமான ஒரு சூழ்நிலையாக உள்ளது. நல்லவேளை, இப்போது* exam *இல்லாததால் நாங்களெல்லாம் தப்பித்தோம்.* Exam *இருந்தால், மிகவும் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கும். ஆகவே, இந்த 2 துணை மின் நிலையங்களைப் புதுப்பித்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2 ஆண்டுக் காலத்திற்குள் சென்னை மாநகரத்தில் மட்டும் கிட்டத்தட்ட 28 துணை மின் நிலையங்கள் அமைத்திருப்பதை நான் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் சொல்லியிருக்கின்றேன். அந்த அளவிற்கு இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் துணை மின் நிலையங்களை தேவையான அளவுக்கு நாம் அமைத்திருக்கின்றோம். இடம் கிடைக்கின்றபோது, அந்தத் துணை மின் நிலையங்களை அமைப்பது எளிதாக இருக்கின்றது.*

2018 ஜுன் 14]

இடம் கிடைக்காத காரணத்தினால்தான் பல பகுதிகளில் பணி நிற்கின்றது. தாம்பரம் பகுதியைப் பொறுத்தவரை, இரவிலே மின் தடை ஏற்படுகிறதென்று சொல்லியிருக்கிறார்கள். மின் தடை அல்ல அது. அது சுற்று வட்டாரத்திலே H.T. line *தான் வந்துகொண்டிருக்கின்றது.* Overhead line *ஆக இருக்கின்ற காரணத்தினால் காற்று அதிகமாக இருக்கின்றபோது ஏதாவது ஒரு பக்கம் ஒரு மரம் விழுந்துவிட்டதென்று சொன்னால் அதைக் கண்டுபிடித்து, அது எந்த இடத்தில் இருக்கிறதென்பதை அறிந்து செய்வதற்கு ½ மணி நேரம், 1 மணி நேரம் ஆகிவிடுகின்றது. அந்தக் காலக்கட்டத்தில்தான்* low voltage *ஏற்படுகிறது. நீங்கள் நேற்றையதினம்கூட என்னிடம் சொன்னீர்கள். மின் பளுவை சீராக்குவதற்கு துணை மின் நிலையங்களை தேவையான அளவுக்கு அமைக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தயாராக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே நான் கோரிக்கை வைப்பதெல்லாம், 'இடங்களை நீங்கள் தேர்வு செய்து கொடுக்க வேண்டும்' என்பதுதான். அதற்குண்டான இழப்பீட்டுத் தொகையைக்கூட இப்போது நாங்கள் கொஞ்சம் உயர்த்தியிருக்கின்றோம். மின்சார வாரியம் அதைக் கொஞ்சம் சேர்த்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது. சென்னையைப் பொறுத்தவரை, இடம் கிடைப்பதுதான் அரிதாக இருக்கின்றது.*

முற்பகல் 10–30

ஒரு கல்லூரி, நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. ஒரு கல்லூரியில் ஒரே ஒரு டவர் அமைப்பதற்கு அவர்கள் உயர் நீதிமன்றத்தில் தடையாணை வாங்கி, கிட்டத்தட்ட 2 ஆண்டு காலம் நாங்கள் அந்த டவரை அமைக்க முடியாமல் இருந்தது. இப்பொழுது ஒரு மாத காலத்திற்கு முன்புதான் அந்தத் தடையாணையை நீக்கி, இப்பொழுது அந்த டவரை அமைக்க முடிந்தது. இப்படி சென்னைக்குள் போடுகின்றபோது இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற பணிகள் காலதாமதம் ஆகின்றன. இருந்தாலும்கூட, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 28 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றோம்.துணை மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் சென்னைக்கு மட்டுமே 5 துணை மின் நிலையங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதுபோல, அருகில் இருக்கின்ற பல்லாவரம் தொகுதியிலும் 230 கிலோ வாட் கொண்ட துணை

மின் நிலையத்தை அமைக்க இருக்கின்றோம். ஆக, எதிர்காலத்தில் இனிமேல் பிரச்சினைகள் இருக்காது. சென்னை மாநகரைப் பொறுத்தவரை, மின்தடையே இல்லாத அளவிற்கு இந்த ஆண்டே கிட்டத்தட்ட நாங்கள் சரி செய்துவிட்டோம். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் முழுமையாக மின்தடை இல்லாத அளவிற்குச் செய்துவிடுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

பேரூராட்சியாகத் தரம் உயர்த்துதல்

***5680—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்ணச்சநல்லூர் தொகுதி, பிச்சாண்டார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*